தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986, மே 8, வியாழக்கிழமை.

சித்திரை 25, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்றது

உணர விரித்துரையா தார்"

தாம் கற்ற நூற்பொருளைப் பிறர் உணருமாறு விரித்துரைக்க முடியாதவர், கொத்தாக மலர்ந்திருந்தபோதிலும் மணம் கமழாத மலரைப் போன்றவர்.

1. வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

சேர்வலார் மின் திட்டம்.

700. (*வினா எண் 4378) திரு. க. வெ. வீராஙம்பலம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் சேர்வலார் மின் திட்டத்தின் மூலம் எவ்வளவு மின்சாரம் உற்பத்தியாகும்?

(ஆ) எப்போது முதல் செயல்படும்?

(இ) இத்திட்டத்தின் மூலம் மதுரை மாவட்டத்தின் தேவை நிறைவுச் செய்யப்படுமா?

[1986 மே 8

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: (அ) இத்திட்டத்தின் நிறுவனத் திறன் 20 மெ.வா. இது ஆண்டொன்றுக்கு 7.5 கோடி யூனிட்டுகள் மின்சாரம் உற்பத்தி செய்யும்.

(ஆ) 26-2-86 அன்று இயக்கப்பட்டு முழு அளவு இயந்திர ஓட்டம் நடத்தப்பட்டது. நீரோட்டம் கிடைக்கும்பொழுது மின் உற்பத்தி துவங்கும்.

(இ) இம்மின்திட்டத்தின் மின் உற்பத்தி தமிழ்நாடு மின் அமைப்புடன் இணைக்கப்படும். குறிப்பிட்ட ஒரு மாவட்டத்திற்கு மட்டும் தனியாக வழங்கப்படுவதில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது நீரோட்டம் கிடைக்கும் நேரத்தில் இது இயங்கும் என்று சொன்னார்கள். எந்த எந்த மாதங்களில் இது இயங்கும் என்று அரசு எதிர்பார்க்கிறது? இந்தத் திட்டம் தவிர வேறு எந்த எந்த திட்டங்கள் மதுரை மாவட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நீர் மின் திட்டம் என்பதால் நீர் கிடைக்கும்போது இயங்கும். நீர் எந்த எந்த பருவக் காலத்தில் கிடைக்கிறதோ அதைப் பொறுத்து இந்தத் திட்டம் இயங்கும். குறிப்பாக தென் மேற்கு பருவ மழை மூலம் நீர் வேகமாக நமக்குக் கிடைக்கும். வேறு எந்த எந்த திட்டங்கள் என்ற விவரம் தற்போது இல்லை.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சேர்வலார் மின் திட்டத்தைப் போல் 7-வது ஐந்தாண்டு திட்டத்திற்குள் தொடங்கும் புனல் மின் திட்டங்கள் எவை? எவை? அவைகள் மூலம் எவ்வளவு மின் உற்பத்தி கிடைக்கும்? ஏதாவது தமிழகத்தில் புதிதாக புனல் மின் திட்டம் ஆரம்பிக்கின்ற சாத்தியக் கூறு இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல கேள்வி. தனியாகப் போடவும்.

1986 மே 8]

திரு ஆர். எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திற்குத் தேவையான மின்சாரத்தை எல்லாம் கொடுத்த பிறகு அடுத்த இடத்திற்கு கொடுக்கப்படுமா என்பதை நான் அறியலாமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்தித் திட்டங்கள் தமிழகம் முழுவதற்கும் பொதுவானது. இவ்வாறு மின் உற்பத்தி செய்யப் படுவது பொதுவான கிரிட்டில் இணைக்கப்படுகிறது. பிறகு ஆங்காங்கு வினியோகம் செய்யப்படுகிறது. மாவட்டத்திற்கு என்று தனியாக வரையறை செய்வது இயலாது.

திரு ச. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அனல் மின் திட்டமும், மேட்டூர் கீழ் மின் திட்டமும் எப்போது மின் உற்பத்தியை துவக்கும் என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சேர்வலார் மின் திட்டம் பற்றிய கேள்வி.

இராசாக்கமங்கலதில் அனல் மின் நிலையம்.

701 (*வினா எண் 9067) திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் குளச்சல் அருகே இராசாக்கமங்கலம் என்ற இடத்தில் அனல் மின் நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய அரசு நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ) இதுகுறித்து மின் வாரியம் விரிவான ஆய்வுப் பணிகளை செய்து வருகிறது.